சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௯ ‖ யுவ புரட்டாசி-1935-செப்டம்பர் ‖ திங்கள் ௨.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

பலவான்குடி

மணிவாசக சங்கத் திருவிழா.

திருவருளால் இச்சங்கத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுத் திருவிழா, ஆவணி உ௪உ (9—9—1935) திங்கட்கிழமை உத்திராட நாள், குமார விநாயகர் திருக்கோயில் வழிபாடு, சித்தி விநாயகர் தண்டபாணியுடன் மாணிக்கவாசகர் திருவுலா, தேவார திருவாசகக் காட்சிகளுடன் ஆலங்குடிவாழ் அந்தணாளரும் செந்தமிழ்ச் செல்வருமாகிய பண்டித, அ. கோபாலையரவர்கள் தலைமையில் பேரறிவாளர்களின் சீரிய விரிவுரைகள் நிகழ நிறைவேறியது.

தலைவருக்கு மாலை சூட்டி மேளதாள விருதுகளுடன் அவரை வரவேற்று அக்கிராசனத் தமர்த்தி தமிழ்மறைவாணர்களாகிய காரைக்குடி அ. நடேச தேசிகர், கோட்டையூர், சிவலோகநாத தேசிகர், கொத்தமங்கலம், நடேச தேசிகர், ஆத்தன்குடி, கனக சபாபதி ஓதுவார் முதலானோர்கள் தேவாராதி திருப்பாசுரங்களை இன்னிசையுடனோத, "சிவநேசன்" இராமசாமி செட்டியார் தலைவரவர்களைப் பாராட்டி வரவேற்புரை கூற, திருவாளர், மெ. வெ. வேலப்பசெட்டியாரவர்கள்வந்தனோபசாரப்பத்திரம்வாசித்துவழங்க,

திருவளர்செல்வன், ப. அழ. இராமசாமி இருபத்தைந்தாவதாண்டு அறிக்கை படிக்க, தலைவர் மிகமேன்மையான பொருட் செறிவுடன் முகவுரை கூறினர்.

முற்பகலில்: கோநகர், திருவளர்செல்வன், சு. மு. பழ சுப்பிரமணியன், 'பண்டைத் தமிழர் பெருமை' என்பதையும், கோநகர் கற்பகவிநாயகர் கலாசாலை யாசிரியர், திருவாளர், ப. இராமநாத பிள்ளையவர்கள் 'திருப்புகழ்' என்பதையும், பிற்பகலில்—திருவளர் செல்வர்களான:—தெ. மு. வீர. முத்துராமன், தெ. மு. வீர. வீரப்பன், கோநகர், பெ. சித. வி. திருநாவுக்கரசு ஆகியமூவரும் முறையே 'தருமிக்குப் பொற்கிளியளித்த திருவிளையாடல்' 'தலவிசேடம்' 'விநோதப் பாக்கள்' என்பன பற்றியும், திருவாளர்களான:— யாழ்ப்பாணம், தமிழ்ப்பண்டிதர், வ. மு. இரத்தினேசுவரய்யர், சொக்கலிங்கம்புதூர், தமிழ்ப்பண்டிதர், ரெ. இராமமூர்த்தி ஐயர், ஆத்தன்குடி, வேதபாடசாலை கலியாணசுந்தர கனபாடிகள், தெய்யூர் ஜகதீசய்யர், அழகாபுரி, சிதம்பரம் செட்டியார், தேவகோட்டை, வயி. நாக. ராம. வே. இராமநாதச் செட்டியார், ஆவுடையார்கோவில் ஸ்தலபுராணிகர், சுந்தரசாஸ்திரியார், ஆகியவர்கள் முறையே 'சமய நிலை' 'அறிவின் ஆற்றல்' 'சிவலீலார்ணவம்' 'சைவ சமயம்' 'நாரைக்கு முத்தி கொடுத்தது' 'கண்ணைகிகற்பும் மன்னவன் முறையும்' 'மாணிக்க வாசகர்' என்பன பற்றியும் சொன்னயம் பொருணயமாதிய பன்னயங்களும் பொங்கித் ததும்ப நன்னயமான பிரசங்கங்கள் புரிந்தனர். தலைவர் தகுந்த அபிப்பிராயங் கூறினர்.

அணிமையிலிருந்தும், சேய்மையிலிருந்தும் சிவநேசச் செல்வர்களும், அன்பர் குழாங்களும், அடியவர்குழாங்களும், பல பிரமுகர்களும், பிரபலஞானவான்களும், பலபுலவர் பெருமக்களும் மன்றத்தில் வந்து குழுமி மிகப் பொலிவுடன் விளங்கினர். உள்ளூர் நகரத்தார்களில் அன்பர் பலர் முன்னின் றுபசரித்தனர்.

திருவாளர்களான:—சென்னை மகாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி, டாக்டர், உ. வே. சாமிநாதையர், புரிசை பெருஞ் சொற்கொண்டல், சு. முருகேச முதலியார், தேவகோட்டை சிவாகமசங்கத்தின் சித்தாந்த போதகாசிரியர், பொ. முத்தைய பிள்ளை, அண்ணாமலை பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர், பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார், கானாடுகாத்தான் சா. ராம. சித. ஜம்புலிங்கம் செட்டியார் ஆகியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துக் கடிதங்களை "சிவநேசன்" இராமசாமி செட்டியார் வாசித்து அனைவர்க்கும் மனமுவந்த வந்தனம் கூறினர். எல்லாவகையாலும் இனிது நிறைவேறியது.

உ

மதிப்புரை மஞ்சரி.

சைவாபிமான சங்க வெளியீடு எ.

விக்கிரக ஆராதனை:— இது யாழ்ப்பாணம், வேதாகம சைவ சித்தாந்த சபையார், சைவப்பிரகாசவித்தியாசாலையில், யுவளு சித்திரை மீ௳ நடத்திய கூட்டத்தில், மீசாலை, திரு, வீ. நடராஜா அவர்கள் செய்த பிரசங்கம். விக்கிரகங்களின் மேன்மையையும், ஆராதனத்தின் அவசியத்தையும், விக்கிரகத்தில் ஈசுவரன் விசேட வியாபகராயிருந்து மனமொழி மெய்களால் வழிபடும் அடியவர்கட்கு அருள்புரிவார் என்பதையும் தெளிவுற விளக்குகிறது.

ஷை வெளியீடு அ.

சைவ சமய வளர்ச்சி:— இது யாழ்ப்பாணம் சைவாபிமான சபையாருடைய வேண்டுகோளின்படி ஷை சபையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர், உடுவில், திரு, சி. நாகையா அவர்கள் செய்த பிரசங்கம். வேதத்தின் முடிவு சிவாகமம், அதின் முடிந்த முடிபே சைவசித்தாந்தம் என்பதையும், மறைகணிந்தனே, மறையவர் நீந்தனேயாகிய புரிதல் தவறு என்பதையும், ஐரோப்பிய நாகரீக மோகத்தால் சைவாசாரத்தைக்கைநழுவ விட்டுத் தபிக்காமல் சைவாசாரத்தைப் போற்றிச் சைவசமயத்தை வளர்ச்சியுறச் செய்ய வேண்டுமென்பதையும் தக்கவாறு விளக்குகிறது.

உயர்ந்தோர் கூறும் உறுதிமொழிகள்.

தோல்வி யென்பது செய்கையில் இல்லை; வாழ்விலேதான் உளது. புனித வாழ்வு வாழ்பவனுக்கு வரும் லாப நஷ்டமெல்லாம் நன்மைக்காகவே என்பதை அறிகிறான்.

உலகில் பிழை நிறைந்திருக்கிறபடியால் அதில் பாபமும் துயாமும் நிறைந்திருக்கின்றன. மாந்தர் நல்வழி பிறழுதற்குக் காரணம் மெய்ப் பொருளைக்காட்டிலும் ஆபாசத்தில் அவர்கள் அதிக நம்பிக்கை வைப்பதாலேயாம். உலக வாஞ்சை வைத்திருப்பவர்களுக்கு ஒண்பொருள் விளங்காது. சிற்றின்பம் அவர்களது மெய்யறிவை மறைத்து விடுகிறது.

சுயாலத்தை விலக்கினவனுக்குப் பேரின்பம் பிறக்கிறது. மெய்ப்பொருள் அறிந்தவன் பேரின்பம் துய்க்கிறான். மெய்ப்பொருள் நாடாதவன் வாழ்வை அனர்த்தம் பண்ணுகிறான். பொய்யான தெல்லாம் போய்விடும்; ஆனால் மெய்ப் பொருள் என்றும் அழியாதிருக்கிறது. விசுவாசத்தை மெய்ப் பொருளில் நிலைநாட்டி இனிது வாழ்ந்திரு.

உனக்கென நீ அரும் பெரும் காரியம் ஏதாவதுசெய்திருப்பாயாகில், அது ஊராருக்கு நீ உழைத்தபோது செய்ததுதான்.

வெறுப்பை வெறுப்பு வெல்லாது; அன்பே வெல்லும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வித்துவான் 4-ம் ஆண்டு மாணவர்களில் ஒருவர் அம்மாணவர்களைத் தன்னுடன்படுத்துக் கூறிய

உடனிலை வாழ்த்துப்பா.

திருமக ளருளாற் றிகழ்தன வைசியர்
பெருகுநன் னாடதிற் பிறந்தரு ளண்ணல்
சார்ந்தகல் லன்புந் தழைந்தெழு வருளு
மார்ந்த வுருவன அழகுறு தோன்றல்
தாயினு மிகுந்தருட் டழைமன முடையோன்
சேயினு மினியன் சிறப்புறு கீர்த்தியன்
அண்ணா மலையெனு மரைய னருளிய
அண்ணா மலைப்பல் கலைக்கழ கந்தனி
லெண்ணார் நூல்களை யியைபுற வுணர்ந்திடுங்
கம்பமில் மனத்தோ னம்பல வாணனும்
இராம லிங்கமா மிளையோன் றானும்
சற்குண விராம சாமியென் பவனும்
மன்னுபன் மொழிகளுந் துன்னிய மனத்தோன்
நண்ணுநற் சீலனுங் கண்ண பிரானும்
அருட்டிற நிறைந்தநற் கிருட்டின சாமியும்
மேவருந் தமிழினை யோய்வற வுணருங்
கோவினு மினிய கோபால சாமியும்
கோபால கிருட்டிணக் குணக்குன் றானுஞ்
சிவஞா னம்மெனுஞ் சீர்மிகு செம்மலும்
நானிலம் புகழ்பெறுஞ் சீனி வாசனுஞ்
சுந்தர னெனும்பெயர்த் தூயோன் றானு
மாங்கில மெனுஞ்சீ ரரியநற் பாடையைப்
பாங்குறப் பயின்ற பழனி வேலனுங்
கல்வியுஞ் சீலமுங் கவிபுனை வன்மையும்
பல்கிய பெரிய சாமியென் பவனும்
முருகே சன்னெனுந் திருமிகு செல்வனுங்
கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளார்
வேட்ப மொழியும் வெள்ளைவா ரணனு
மெண்டகு நூற்களை யியைபுற வுணர்ந்தநற்
பண்புடை வேணுகோ பாலனென் பவனும்
ஓதுமிக் கவிபுனை வேதநா யகனும்
அமிழ்தினு மினியநற் றமிழ்மொழி யதனை
அழகுறும் வண்ண மாய்ந்தநற் பயனால்
'தனக்கொரு தாயுந் தந்தையு மில்லா'
மனக்குறும் பறுக்கும் மன்றுறை நடன
எண்ணரு மிறையோ னருளா
னண்ணரும் வழிவழி நயந்துவாழ் குவமே!!

சிதம்பரம்
2-4-35

M. வேதநாயகன்.

உ

பாரதத்திலுள்ள ஒரு பாட்டின் நயம்.

(அருகூர், திரு, S. A. முத்தையாத்தேவர் அவர்கள்.)

அமிழ்தினும் இனிய தமிழ் விளங்கும் இந்நாடு மூவேந்தர்களாலும் ஆளப்பெற்று வந்தது. இத்தமிழை மிக்க செழிப்பாக அவர்கள் வளர்த்தமை வெள்ளிடை மலையேயாம். இம்மூவரில் தமிழ் வளர்த்தலில் முதன்மை பெற்றவர் பாண்டியர் என்பது, "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ் - சவுந்தர பாண்டிய னெனுந் தமிழ்நாடனுஞ் - சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு - மங்கலப் பாண்டிவள நாடென்ப" என்ற செய்யுளான் இனிது விளங்கும்.

இத்தகைய நன்னாட்டிலே "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிது காண்" என்றபடி அரிய மக்கட் பிறவியை அடைந்தவர், தாம் வளர்ச்சியை எவ்வாறு எய்துகின்றனரோ, அவ்வாறே தமிழ்க் கல்வி அறிவையும் அடைகின்றனர். பிறந்து உலக உணர்வு எய்தி தாலோசை எழுங் காலந் தொடங்கி, தொட்டிலிலிடும்போதும் மற்றும் பல வமயங்களினும் தாய் செவி வாயிலாகத் தமிழறிவை ஊட்ட உண்டு வளர்வாராயினர். பின்னர் நான்காம் ஆண்டு நிரம்பி ஐந்தாவதாண்டு எய்துங்கால், தந்தையரால் தக்க கணக்காயரிடத்து ஒப்புவிக்கப் பெற்றுக் கலை பயின்று பிறைச் சந்திரனைப் போல் மேலும் மேலும் சிறந்த கல்வி அறிவைப் பெறுவாராயினர். அவர்கள் அவ்வாறு உணர்ந்த தமிழ்ச் சுவையை உலகினருக்குப் பயன் படுத்த எண்ணி அரிய பெரிய காப்பியங்களை இயற்றுவாராயினர். அவ்வாறு பாடியவர்களில் ஒருவர், வில்லிபுத்தூர் ஆழ்வாரெனும் பெயரமைந்த பெரியாரும் ஆவர். இவர் பாடிய பாரத யாப்புக்கள் சந்தவனப்பு வாய்ந்தனவாகும் என்பதை யாவரும் மறுக்கார். அத்தகையார் அருணகிரிநாதரிடத்துத் தோல்வியுற்றனராயினும், அவரல்லாத மற்றைப் புலவர்களுக்கு மேம்பட்டவர் எனக் கூறுதல் எவ்வகையினும் மிகையாகாது. இவரால் பாடப்பெற்ற மகாபாரதத்தில் பதின்மூன்றாம் போர்ச் சருக்கத்தில் தன்மகன் அபிமன்னு இறந்தமையைக் கண்ட அருச்சுனன் ஆருத்துயரெய்தி வஞ்சினங் கூறிய செய்தி பல சொல்லப்பட்டுள்ளன. அவ்வஞ்சினங்களை உணர்த்தும் பாடல்களுள், "வினையிலென் மகன் றன்னுடல் வேறு செய்வித்தோனைக் - குனி சிலையின் நாணையுயிர் கோறல் புரியேனேல் - மனைவி யுயிர்வீய நன் மகன் மனைவிகையால் - தினையளவு மோர்பொழுது சீவித்தவனாவேன்" என்பதும் ஒன்றாகும்.

அப்பாவினுக்குப் பொருள் காணமுயலும் அறிஞர்கள் வெவ் வேறு வகையில் பொருள் கூறுகின்றனர். ஆனால் அதனுண்மையை விளக்கிற்றிலர். பதிப்பாசிரியரில் மிகச் சிறந்தவர் ஆறுமுக நாவலர் என்பது உலகு அறிந்ததேயாம். அவரது பதிப்பில் எவ்வெப்பாக்கள் எவ்வெவ்வாறு ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றனவோ, அவ்வவ் வாறே அவர் பதிக்குந் தன்மைவாய்ந்தவர் என்பதை அவரது பதிப் பினின்றும் நாம் இற்றைக்குங் காணலாம்.

இதுபோது எடுத்துக்கொண்ட வஞ்சினம் உணர்த்தும் பாட லானது, ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பிலும் இதர பதிப்புக்களிலும் நான்மேலே வரைந்துள்ளபடியே காணப்படுகிறது. ஆனால் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பினில் மாத்திரம் அப்பாடல் சிலவேறுபாடு களுடன் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அது "வினையிலென் மகன் றனுயிர் வேறு செய்வித்தோனை - குனிசிலையினானை யுயிர்கோறல் புரியேனேன் - மனைவி அயலான் மருவல் கண்டு மவள்கையாற் - றினையளவுமோர் பொழுது தின்றவனுமாவேன்" என்பதாம். இப் பாடலை எக்கருத்துக்கொண்டு பதிப்பாசிரியர் மாற்றியுளார்போலும் என்பது புலப்படவில்லை. அவரது கூற்று எவ்வாறு ஆயினும் ஆகுக. ஆனால் இதனை உலகு ஏற்றுக்கொள்ளுமோ எனின், ஏற்காதெனறே சொல்லவேண்டி இருக்கிறது.

நாவலர் பதிப்பின் கருத்தை நந்தமிழ்நாடு பல ஆண்டுகளாக ஏற்றுக்கொண்டிருத்தலால், யானும் அவ்வழியையே பற்றிச் செல் லுதல் சாலவும் நன்மையைப்பயக்கும் என்றே துணிந்து அத்துறை யிற் செல்லலாயினேன்.

இல்வாழ்க்கையை இனிது நடத்தும் நம்நாட்டினர்கள், தமது மகன் தக்க உரு திரு ஆற்றல் முதலியவற்றிற் சிறந்தவனாகி, மணப் பருவத்தை அடைந்த உடன் அவனுக்குத் தக்க பெண்ணைத்தேடி உலகறிய மணமுடிப்பார்கள். மணம் பெற்ற பின்னர் அம்மக னிடம் தம் ஆளுகைக்குட்பட்ட அனைத்தையும் ஒப்புவித்து, பெற் றோர்கள் தமக்கு உறுபயன் தேடிக் காடடைவர். இவ்வுண்மை "காமஞ் சான்றக் கடைக்கோட்காலை - ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி-அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்-சிறந்தது பயிற் றல் இறந்ததன் பயனே" எனவும் "மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து - மிக்க காம வேட்கை தீர்ந்துழித் - தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித் - தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப" எனவும் இவ்விரு சூத்திரங்களாலும் நமக்குத் தெளிவாகின்றது.

இதற்குச் சான்றாக தசரதனது மனோநிலையை எடுத்துக் காட் டாகக் காட்டுவாம். "மைந்தரையின் வரம்பில் காலமும் - நொந்த னன் இராம னென்னோவை நீக்குவான் - வந்தனன் இனியவன்

வருந்த யான் பிழைத் துய்ந்தனன் போவதோர் உறுதி எண்ணினேன்'' என்பது, அளவற்ற காலம் பிள்ளை இலாது வருந்திய துன்பத்தை நீக்கிய இராமனை இப் பூபாரத்தைத் தாங்கும்படி செய்துவிட்டுத் தான் தவமியற்றச் செல்ல எண்ணியதாக தசரதர் கூறியதை உணர்த்துகின்றது. மேலும் ''பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம் - திருமகள் மணவினை தெரியக் கண்டயான் - அருமகள் நிறைகுணத்து அவனி மாதெனும் - ஒருமகள் மணமுங் கண்டுவப்பதாயினேன்'' என்பது, சீதையினது கல்யாணத்தைக்கண்டு களித்த தசரதன், பூதேவியையும் அவனுக்கே மணஞ்செய்வித்துப் பார்த்து மகிழ எண்ணியதைத் தெரிவிக்கின்றது. அன்றியும் ''ஆதலால் இராமனுக்கு அரசை நல்கிப் - பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குவான் - மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்கு'' என்று தசரதர் கூறுகின்றார். இவற்றை நோக்குங்கால், தந்தை எல்லாச்செல்வங்களையும் தனயனிடம்ஒப்புவித்துத்தான் தவமியற்றுதலே முதன்மையான கடமையாகக் கொண்டமை, முற்காலத்து இருந்து வழங்கி வந்ததாகத் தெரிகிறது. அறுபதினாயிரம் ஆண்டு ஆட்சிபுரிந்தவர் தசரதர். அவரே, ''துறப்பெனுந் தெப்பமே துணை செய்யாவிடின் - பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்கலாகுமோ'' என்று கூறுகின்றார். ஆகையால் பண்டைக் காலந் தொடங்கி நம் மனோர் தவத்தை விரும்பி மற்றவையனைத்தையும் வெறுத்தனர் என்பது அகங்கைக் கனியேயாம்.

கோப்பெருஞ் சோழனெனும் பெருந்தகை, தனது மக்கள், தன்னொடு பகைத் தெழுதலைக் கண்டு வெகுண்ட போழ்து, அவ்வரசன் புல்லாற்றூர் எயிற்றனார் என்ற புலவர் பெருமானால் அறிவுறுத்தியவாறு தவமியற்றுதற் பொருட்டுக் காடடைந்தான் என்பது புறநானூற்றால் அறியப்படுஞ் செய்தியேயாம்.

பிர்மஸ்ரீ டாக்டர் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள், பெருங் கதையில் இருந்து எடுத்து வசன உருவத்தை அளித்து, உலகத்தில் நிகழச் செய்த உதயணன் காதையுள் சேடகனெனும் ஓர் அரசன் உளன். அவ்வரசனுக்குப் புதல்வர் பதின்மரும் மகளொருத்தியுமாக பதினொருவர் தோன்றினர். சதாணிகனெனும் அரசனுக்கு அம்மகளை மணஞ் செய்து கொடுத்தான். அதன் பின் ஓர் நாள் சேடகனெனும் அரசன், வானத்தின் மேகந் தோன்றுவதையும் அழிவதையுங் கண்ணுற்றான். அவ்வமயமே அவனுக்குஉலகின்மேல் வெறுப்புத் தோன்றிற்று. தன்மனவெறுப்பினது துணிவை தன் மக்களுக்கு முறையே தனித்தனியே எடுத்துரைத்து அரசை யேற்றுக்கொள்ளும்படிக்குக் கேட்டுக்கொண்டான். அச்சொற் கேட்ட அவனது மக்கள், தாங்களும் அவ்வழியைப் பற்றி நிற்றலை உணர்த்தாநின்றனர். பிறகு தன் பத்தாவது குமாரனை

வற்புறுத்தி அச்சேடகனெனும் அரசன் தன்னரசாட்சியை அவனிடம் ஒப்புவித்தனன். இந்நூலில் துறவெய்தினர் பலரைக் காணலாம். மக்கட்பிறப்பினர் துறவைக்கண்ணுங் கருத்துமாகக் கொண்டு வந்தார் என்பது இந்நூலின் மூலம் வெளியாம்.

நிற்க, சங்கப் பதிப்பின்படி பொருள் கொண்டால் உலகவொழுக்கத்தை முற்றிலும் வேறுபடுத்திவிடும் என்பதை அடியிற் காணப்பெறுங் காரணங்களாற் றெளிவாம். எங்ஙனமெனின், 'மிக்க எளியவன் கூட தனது மனைவியை அயலான் புணரக் கண்டால் அக்கணத்திலேயே அன்னவர்க்குத்தக்க பெருந்தீங்குகளை விளைப்பதைப் பல சரித்திரங்களாலும், தினசரி பத்திரிகைகளாலும், கண்கூடாகவும் அறிகிறோம். பரத்தையாகிய மாதவி, கோவலன் அகப்பொருட் சுவையை வேறுபட யாழ் மூலம் வாசிக்கக் கண்டாள்; அவ்வியாழை அவனது கையினின்றும் வாங்கி, அக்கோவலன் வாசித்த துறையையே அவள் வாசித்தாள். அது பொறாது கோவலன் அவளை வெறுத்தமை யாவரும் உணர்ந்ததே. பொருணனி சேரோனே இச்சிக்கும் பரத்தையரைக் கோவலன் வெறுத்து மறுத்தனன் என்றால், மணங்கொண்ட மனைவியை அயலான மருவக் கண்டான், எத்தகைய இழிந்த நிலையில் வாழ்பவனும் இருந்தாலும் அத்தன்மை வாய்ந்தவளது கையில் வாங்கிஉண்டு உயிர்வாழ்வனோ? வாழான் என்பதே துணிவு. ஆதலால், "குறும்பி அளவாக்காதைக் குடைந்து தோண்டி - எட்டினமட்டறுப்பதற்கோ வில்லி இல்லை எனப் புகழப் பெறும் கவிஞர் கோமான் உலகின் இயலுக்கு மாறுபட இங்ஙனம் கூறியிரார்" என்பது திண்ணம்.

இத்துறவுக்கு விதி கூறியனவும், எடுத்துக்கொண்ட யாப்புக்கு நன்வழிகாட்டி நின்றனவுமாகிய சூத்திரங்களிரண்டு. அவைகள் தொல்காப்பியத்தும் நம்பி அகப்பொருளென்னும் அகப்பொருள் விளக்கத்தும் காணப்படுபவைகளேயாம். கிழவனும் கிழவியும் என்று தொல்காப்பியச் சூத்திரமும், தலைவனும் தலைவியும் என்று அகப்பொருட் சூத்திரமும், உணர்த்தா நின்றன. இதிற் கண்ட விதிகள் வானப்ரஸ்தா தர்மத்தை உணர்த்துவனவாகும். கவியின் திருவாக்கு "மனைவியுயிர்வீய" என்பதே; அவ்விதியைக்கொண்டே தான் இக்கூற்றுக்குப் பொருள் காணுதல் வேண்டும் மகனுக்கு உரிமை கிடைத்த பின்னர், தமது உரிமையை அவனுக்கு ஈந்து இருவருங் காடடைந்து தவம் இயற்ற வேண்டும் எனறதானே, மனைவியிலானீ யாதொரு தோற்றமுமின்றி சன்னியாசங்கோடலே சிறந்த தென்பது இதன் உட்பொருளாம்.

நன்மகன் மனைவிகையால் தினையளவுமோர்பொழுது என்னுங் கருத்தை நோக்குங்கால், நிலவுலகத்திலே நற்குண நற்செய்கையிலாத மக்கட் பலர் உளர் என்பதும், அவர்களது மனைவிகளின்

கையில்வாங்கி உண்ட தந்தையராயினர் பலர் இருந்தனர் என்பதும் பெறப்படுகின்றது.

மகன் தமது அதிகாரத்தை எய்திய பின்னர் மனைவியோடு வானப் பிரத்தமும், மனைவியை இழந்தவர் சன்னியாசமும் பெற்றுய்ய வேண்டு மென்பதே இதனது முடிவாம்.

நுண்ணிய அறிவைப் பெற்ற பேரறிஞர்கள் உலகினருக்கு இத்துறவின் உண்மையை உணர்த்தினர் என்பதை பாரத நூலாசிரியர் தானும் வற்புறுத்திக் காட்டினமை இக்கவியின் மூலம் வெளிப்படுதல் காண்க.

அறிஞர்களே! உலகத் தருமத்தை பேரறிவாளர்கள், யாவரும் உணர பொதிந்து நிற்கயாத்தலே புராண இதிகாசங்கள் முதலிய நூல்களின் நோக்கம். அந்நோக்கை முதன்மையாகக் கொண்டே எழுதலாயினேன்.

பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள்.

(வித்துவான் திரு. மு. வேதநாயகன் அவர்கள்)

தொன்று தொட்டு வழங்கிவருகின்ற தமிழ் மொழியின், சிறப்பியல்புகளை ஆராயும் பொழுது, அம்மொழியை வழங்கி வந்த தமிழர்கள் எம்முறையில் தங்களுடைய பழக்க வழக்கங்களைக் கையாண்டு வந்தனர் என்பதை ஆராய்வதும் பொருத்தம் உடையதே யாகும். பழந் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள் ஆரியர் வருவதற்கு முன்பே செம்மை யுற்றுத் திகழ்ந்து விளங்கி இருந்தது என்பது ஆராய்ச்சியாளரின் கொள்கை. இம்முறையில் ஆராயத் தலைப்பட்ட கால்டுவெல் என்னும் ஆங்கிலப் பேராசிரியர், அக்காலத்தில் வழங்கிய சொற்களை ஆதாரவாகக் கொண்டே அவர்களின் பழக்க வழக்கங்களை அறுதி இடுகின்றார். அவற்றுள், நாடு என்று நாம் வழங்குகின்ற பெயர் பண்டைத் தமிழரால் வழங்கப்பட்ட தனித் தமிழ்ச் சொல்லே என்பதில் ஒரு சிறிதும் ஐயம்இன்று. கால்டுவெல் நாடு என்னும் சொல் நடு என்னும் தாதுவின் அடியாகப் பிறந்தது என்று கூறுகின்றார். பண்படுத்திப் பயிர் செய்யும் நிலத்தை; மக்கள் நாடி வந்து அடைந்த இடத்தை நாடு என்று வழங்கினர்கள் என்பது இவர் கருத்து என்று தெரிகின்றது. வள்ளுவரும்,

> "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
> நாட வளந்தரும் நாடு"

என்று கூறிப் போந்தார். இதனால் காட்டை அழித்து நாடாக்கி வசித்தற்குத் தமிழர்களுக்குத் தெரிந்து இருந்தது என்று அறிகின்றோம். நாடு மக்கள் வசிப்பதற்கு இன்றியமையாத தொன்றாயினும், அந்நாட்டிற்கு ஒரு சிறந்த அரசனை அமைத்தல் வேண்டும் என்று எண்ணினர்கள்.

"ஆங்கமை(வு) எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை(வு) இல்லாத நாடு"

என்று பொய்யாமொழியார் கூறும் பொருளுரை போற்றத் தக்க தொன்றும். இன்னும்,

"நெல்லு(ம்) உயி(ர்) அன்றே நீரு(ம்) உயி(ர்) அன்றே
மன்ன(ன்) உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று புறப்பாட்டிற் காண்கின்றோம். ஆகவே நாட்டிற்குச் சிறந்த அரசன் இன்றியமையாது வேண்டும் என்று பண்டைக்காலத் தமிழர்கள் அறிந்திருந்தனர். அரசனுக்கு அமைந்த பெயர்களும், உலகத்திற் கெல்லாம் இறைவனாக உள்ளவனுக்கு வழங்கும் பெயர்களும் ஒன்றேயாய் ஒற்றுமை யுடையனவாக இருத்தலைநோக்கும் பொழுது, அரசனை அக்காலத் தமிழர்கள் எவ்வாறு போற்றிவந்தனர் என்பது நன்கு விளங்குகின்றது.

இறைவன், கோ, கோன், ஐயன், காவலன், மன்னன், வேந்தன் என்னும் சொற்களாலேயே காவலனையும், கடவுளையும் அமைத்தலை நோக்கும்பொழுது, அச்சொற்களில் சிறந்த கருத்துகள் அமைந்து இருக்கின்றன என்று அறிகின்றோம். இறைவனுடைய தன்மை, அரசனிடத்திலும் அமைந்து இருந்தது என்று பழந்தமிழ் மக்கள் கருதிவந்தனர். இறைவன் என்னும்சொல் இறு என்னும் தாதுவின் அடியாகப் பிறந்தது.

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக்
கண்டேனே யென்னும்........."

என்று கூறும் திருவாய்மொழி அழகுவாய்ந்த மொழியாக அமைந்துளது. இருவருடைய தன்மையும் ஒன்றே என்று அவர்கள் கருதிவந்தனர். இருவரும் உறைகின்ற இடத்தைக் கோயில் என்னும் ஓர் சொல்லாலேயே குறித்து இருத்தலை உற்று நோக்கத்தக்கது. இக்கொள்கைகள் எல்லாம், பழந்தமிழர்களுக்கு அரசியல் அடிப்படையாக அமைந்து இருந்த தன்மையை விளக்குகின்றன. காவலன் என்ற சொல்லை விளக்கப் புகுந்த சேக்கிழார் பெருமான்,

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக்கு இடையூறு தன்னா(ல்) தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தா(ல்) கள்வரால் உயிர்தம்மா(ல்)
ஆனபய(ம்) ஐந்து(ம்) தீர்த்(து) அறங்காப்பா(ன்) அல்லனோ"

என்று அழகுற அருளிப்போந்தார். * (தொடரும்)

---

* அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப்பகுதி விரிவுரையாளர்; உயர்திரு, ஆர். பி. சேதுப்பிள்ளை பீ. ஏ. பீ. எல். அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி இக்கட்டுரை எழுதப்பட்டது.

அரசமரத்தை வலம்வருதலின் நியாயமும் பலனும்.

(குதுமலை, திரு, ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.)

ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியினுடைய வலது கண்ணிலிருந்து அரசமரம் தோற்றியதெனவும், எல்லா மரங்களுக்கும் முதன்மையாக இருக்கும்படி அவர் அநுக்கிரகித்து அபிஷேகஞ்செய்து அரசு எனப் பெயர்வைத்தன ரெனவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தமரத்தில் தாம்பிரசத்தும், மின்சாரமு மிருக்கின்றது. நோயினால் துன்பப்பட்டுச் சுகமடைந்து வருவோரும், சரீரமும் மனமும் மெலிவடைந்திருப்போரும் காலை மாலையாகிய இருநேரங்களிலும் ஸ்நானஞ்செய்து ஈரவுடையுடன் அரசமரத்தை வலம்வந்து வருவதைக்காண்கின்றோம். அவர்கள் அப்படிச்செய்து வருவதால் நாளுக்கு நாள் நலிவுகள் குறைந்து தெளிவடைந்து பூரணசுகத்தைப் பெறுவதையும் காண்கின்றோம். இதற்குக்காரணம் இந்த மரத்தின் காற்றேயாம். மின்சாரமானது கூர்மையான முனைகளின் வழியாகவே நன்கு ஒழுகுந் தன்மையுடையதும், ஈரமான பொருள்களில் மட்டுமே நன்குபரவுந் தன்மையுடையதுமாகும். ஆதலால் அரசமரத்திலுள்ள மின்சாரமானது அரசிலையின் கூர்மையான நுனியின்வழியாக நனைந்த ஈரமான உடையுடன் வலம்வருகின்ற நோயாளிகளின் சரீரத்தில் சிறிது சிறிதாகப்பரவி நாளுக்கு நாள் வலிவைத்தந்து சுகப்படுத்துகின்றதென்று இரசாயன சாஸ்திர ஞானிகள் சொல்லுவர்.

மரங்கள் பகற்காலத்தில் சுத்தவாயுவை வெளிப்படுத்தி அசுத்தமானவாயுவை உட்கொள்ளுதலால், அப்பொழுது மரத்தினடியில் இருந்தால் தேகத்திற்குக் கெடுதியைக் கொடுக்கும். ஆகவே எந்த மரத்தின்கீழும் இராக்காலத்தில் இருத்தல்கூடாது. இதுபற்றியன்றோ காலை மாலைகளில் அரசமரத்தை வலம் செய்யவேண்டுமென்று விதித்ததாகும்.

பிரமசரிய விரதத்தை பிழைபடாமல் காத்து ஒழுக்கத்திற் சிறந்துவிளங்கிய ஒரு புருஷன் வினைப்பயனால் இறப்பின் அவனே அரசமரமாகப் பிறக்கின்றனன் என்றும் இக் காரணம்பற்றியே இந்த மரத்தின் இடதுபக்கத்தில் நாகப்பிரதிஷ்டை செய்பவர்கட்குப் புத்திரபாக்கிய முண்டாகுமென்றும், அரசமரம் ஆணும் வேப்பமரம் பெண்ணுமாம் இந்த இரண்டையும் ஒன்றாக நட்டு வளர்த்து வைதிக முறைப்படி விவாகஞ்செய்து வழிபடுபவர்கட்கு விரைவாகப் புத்திரபாக்கிய முண்டாகுமென்றும் பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். அநுபவத்திலும் கண்கண்ட காட்சியாம்.

கண்டாச்சிபுரம், திரு, அ. முத்தையபிள்ளை யவர்கள் கூறியபடி கிரகதோஷங்கள் தீருவதுடன் இஷ்ட சித்திகளையும் பெற்று வாழ்வார்கள். அவர்கள் காட்டிய பிரமாணங்கள் மிகவும் அருமையானவை.

உ

தமிழர் தொன்மை.

(கோவில்பட்டி, தமிழ்ப்பிரம சூத்திராசிரியர், உயர்திரு, சாமி, விருதை, சிவஞானயோகிகள்)

ஒண்மை யறிவு மோர்வுமிக் கோரே
உண்மை கேண்மின் உண்மை கேண்மின்

மீன்கொடி படைத்த மேன்மை மனுக்கள்
ஆன்ற பாண்டிய ரனைவருந் தமிழர்

தெற்கட் பஃறுளி யாறு சீர்சால்
நற்புகழ் வடக்கண் நளிரிமை யார்மலை

வரைதமிழ் நாடா வயங்கிய முற்கால்
திருவிட மெனும்பே ரதற்குச் சிறந்தது.

பின்னாரியர்கள் பிறங்கின் னாட்டில்
உன்னிவந் துகுடி யுறுமுன மிங்குத்

தமிழ்மொழி வழக்குந் தகையொண் ணூலும்
இமிழிசை யைந்திணை இனமுந் தேவும்

போற்றவர் யார்க்கும் பொதுச்சிவக் கோளும்
ஆற்றருந் தளியு மகத்தெண் ணெழுத்தும்

நயமிகு மொழுக்கமும் நனிச்சீர்த் தேற்றமும்
உயிர்த்திருந் தனவற முனாற்றா சிருந்தது.

மற்றிவை யாவும் வான்றமிழ்ப் புலவர்
சொற்ற மொழிகள் தொகைப்படு வேதம்

ஆகமம் புராண மவிரிதி காசம்
வாகய லார்சொல் மருளி லாங்கிலக்

கற்றவர் கற்பொறி கவின்பந் தர்க்கார்
தத்தர் முன்னையர் தம்முறை வழியால்

*துணியப் பட்டன தொன்றீ ரினத்தில்
இணங்கா நாற்குல மியற்றினர் பின்னோர்

என்ன லு மொருதலை யிவையுண்
மன்னி யுணர்ந்து மயக்கொழி வீரே.

௨

சேக்கிழாரின் தெய்வப் புலமை.

(சென்னை, தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை ஆசிரியர், திரு, A. தம்பிரான் முதலியாரவர்கள்)

நம் தண்டமிழ்த் தென்னாட்டிடைத்தோன்றிய புலவர் பெருமக்கள் பலராவர். அவர்களுள் திருவள்ளுவர், சேக்கிழார், கம்பர், கூத்தர், இளங்கோவடிகள் முதலியோராவர். அவர்களுள் தங்கம் தமிழ்ப் புலமை வெளிப்படுத்தியவர் பலராவர். மற்றுந் தெய்வத் தன்மை வாய்க்கப்பெற்றுப் புலமையை வெளிப்படுத்தியவர் சிலராவர். இத்தகையருள் தெய்வப் புலமை வாய்க்கப்பெற்றவர் வள்ளுவரும் சேக்கிழாருமாகிய இவ்விருவரே. ஈண்டு சேக்கிழாரின் தெய்வப் புலமையைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வாம்.

"காரிகைக் கற்றுக் கவிபா டுவதினும்
பேரிகை கொட்டி பிழைப்பது நன்று"

என்ற உண்மையை உணராமல் தற்காலத்துத் தமிழ்மக்கள் என்றுதங்களைப் பிறர் கூறவிழையும் அன்பர்கள் பலர் யாப்பருங் கலக்காரிகையையரை குறையாகக் கற்று 'சீர்பூக்க, ஏர்பூத்த, கார்பூத்த' என்று எதுகை மோனைகளை வைத்துக்கொண்டு கண்டவன் (பாடப்பெறுதலிற் றகுதியிலாதவன்) பேரில் கவிகளியற்றி ஏனோ? தமிழின் தனி மாண்பைக் கெடுக்கின்றார்கள். கவி பாடும்போது பொருள் ஆழமும், நயமும் பொருந்தும்படி பாடுதல் வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டையே தகர்த்தெறிந்துவிடுகின்றார்கள். அத்தகையர் பண்டைக் காலத்து நூல்களைக் கையாலேனும் தொட்டறியார்கொல். பழந்தமிழ்ப புலவர்கள் கவியில் ஒரு எழுத்துக்கூடப் பொருள் நயமுதலியன பொருந்தாமல் அகாரணமாகப் புகுத்தார்கள் என்பது அவர்கள் நமக்குத் தந்துதவிய நூல்களை யாராயப் புகின் நன்கு புலனாகும்.

"கருணை முகிலான கொடைக் காத்தன் தென்னனை
வருண குலாதித்தன் மகிழ்ந்தால்— அருண மலர்ச்
செங்கை யெங்கும் சங்குதங்கும் திங்கள்பொங்குங் கங்குன்மங்கும்
கொங்கை யெங்குங் குங்குமந்தங்கும்".

(வருணகுலாதித்தன் மடல்)

என்ற பாவையும்,

"பஞ்சடிக்கஞ்சடி கூடச்சே நாடச்சே இடந்தேடச்சே கண்ணி
லஞ்சனங் கரிக்கச்சே கரிக்கச் செங்கறிப் பொரிக்கச்சே
பணியாரம் வாரித்தின்னச்சே நண்டுகால் வச்சுக் கிண்டச்சே
நத்தைக் கறிவைச் சவிக்கச்சே யூமச்சிவைச்சு உருஞ்சச்சே கள்ளு
சாராயங் குடிக்கச்சே கஞ்சாப்புகையும் வாங்கச்சே சரிக்கநல்ல
மறைவிலே முத்தந்தாச் சொன்னாண்டி பள்ளியரே"

(முக்கூடற்பள்ளு நாடகம்)

என்ற பாட்டினையும்,

"திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கண
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
யரசுகெடுத் தலம்வரு மல்லற் காலை"

என இளங்கோவடிகள் வரைந்த அந்திவான் ஓவியத்தினையும் ஓர்ந்து நோக்குங்கால் அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப்புலமை அறியக்கிடைக்கும். எனவே, அன்பர்களே அவர்களின் தமிழ்ப் புலமை இருந்தவாறென்னே! என்றதிசயிக்க நேரிடுவதை நோக்குங்கள்.

இத்தகைய புலமையுடன் உலகிடை வாழ்ந்த பெரும்புலவர்கள்,

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்"

என்ற திருவள்ளுவதேவர் திருவாக்கிற் கிணங்க இறைவன் வழி பாட்டை இடையீடின்றி நிகழ்த்தற் பொருட்டுப் பாக்களால் காவியங்களை யும், நாடகங்களையும், வாழ்த்துக்களையும், இன்னதன்ன பிறவற்றையும் பாடினார்கள். இப்பாட்டுத் தொண்டால் அவர்கள் இயற்கை வடிவான இறைவனோடியைந்த இன்பவாழ்வை இறைவனருளை (தெய்வப் புலமையை) இந்நிலவுலகிலேயே பெற்றார்கள். அவர்கள் பாடிய பாட்டுக் காவியங்கள் எழுத்துக்களல்ல; சொற்களல்ல; சீர்களல்ல; தளைகளல்ல; அடிகளல்ல; தொடைகளல்ல; எதுகைகளல்ல; மோனைகளல்ல; அவைகள் யாவும் நுண் பொருளமைந்த இயற்கையின் எழுத்தோவியங்கள். இத்தகைய எழுத் தோவியம் எழுதும் புலவர்கள் தெய்வப் புலமை வாய்க்கப் பெற்றவர்களே யாவர். இங்ஙன் அவர்கள் விளங்கும் தன்மை "பொன் மலர் நாற்ற முடைத்தாகும்" தன்மையை யொக்குமன்றோ. 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கம்பர் வீட்டுக் கட்டுத் தரியும் கவிபாடும்' என்றிவ்வாறெல்லாம் போற்றப் படும் கம்பநாடர் ஒரு பெரும் புலவர் என்பது யாவராலும் மறுக்கப்படாத உண்மை. நம் பாரதியாரும்,

'யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல்'

என்று கம்பநாடரைத்தான் முதற்கண் வைத்துப் புகழ்ந்துள்ளார்கள். ஆனால் வள்ளுவரைப் போன்றும் சேக்கிழாரைப் போன்றும் தெய்வப் புலமை வாய்க்கப் பெற்றவரல்லர் என்ற உண்மையை உலகம் மறுக்காது. தெய்வப் புலமை எல்லாத் தமிழ்ப் புலவர்க்கும் வாய்ப்பதரிது. சில குறிப் பிட்ட கவிஞர்கள் தான் அஃது வாய்க்கப் பெற்றிலங்குவர். இருபதாம் நூற்றாண்டுக் கவிஞராய்த் தற்போதிலங்கும் தாகூரைப் பற்றிப் பாரதியார்,

'கவீந்திராம் ரவீந்திரநாத தாகூர்'

என்று பாடியதில் கவீந்திரர் எனச் சிறப்பித்துக் கூறுகிறார். எனவே, அவரும் தெய்வீகவருள் பெற்றவர் என்பது வெள்ளிடைமலை. சேக்கிழார் கவிகளில் தெய்வத் தன்மை மணப்பதைக் காணும்தோறும் அவரது தெய் வப் புலமை நன்கு விளங்குகின்றது. மற்றும் 'உலகெலாம்' என்றிறைவனே அடியெடுத்துத் தரப்பெற்றுப் பாடிய புலவராகலானும் அவரது தெய்வப்

புலமையை விளக்க வேறொரு சான்றும் வேண்டாங்கொல். "ஆண்டவன் இசைமயத்தன்" என்னும் உண்மையை நந்தமிழ்ப் பெரியோர்கள் நன்குணர்ந்து உலகிற்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

"ஏழிசையாய் இசைப்பயனாய்
என்னுடைய தோழனுமாய்"

என்று வன்றொண்டர் தமது தோழராங் கடவுளை வழுத்தியிருத்தல் காண்க. இசைவழி இறைவனை வழுத்திப் பேறு பெற்றோர் பலர். அவருள் தமிழ் நாட்டுத் தனிப்பெரும் பெரியோராம் ஒருவரை மட்டும் ஈண்டு நினைப்பாம். அவ்வன்பர் குழலில் இசைபாடி இறைமைப் பேறு பெற்றவர். அவரது இசை, எவ்வெவ் வழியில் படர்ந்து, உலகிலும் உயிரிலும் ஊடுருவிப் பாய்ந்து, முடிவில் எல்லாவற்றையுங் கடந்த முழுமுதற் பொருளைக் கவர்ந்தது என்பதைச் சேக்கிழார் பெருமான் செவ்விய தமிழ்பாடல்களாக இசைத்துள்ளார். அப்பாடல்களில் சிலவருமாறு:—

"வள்ளலார் வாசிக்கு மணித்துளை வாய் வேய்ங்குழலின்
உள்ளுறைபஞ் செழுத்தாக ஒழுகியெழு மதுரவொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கு மேலமரர் தருவிளைதேன்
தெள்ளமுதி னுடன் கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க".
"மெய்யன்பர் மனத்தன்பின் விளைத்தவிசைக் குழலோசை
வையந்தன் னையுநிறைத்து வானந்தன் மயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால்".

அன்பர்களே! இசைவழிபாட்டின் பெருமையை நோக்குங்கள். இப் பாக்களைப் பார்த்துப் பார்த்து மகிழுங்கள். இசையாளனுக்கு எல்லாத் தத்துவங்களும் மறைந்து, அவை யெல்லாஞ் சிவமாகப் பொலியு மென்க. இப்பெருநிலை கூட்டும் இசைப் பாட்டையும் ஒருவித வழிபாடாகக் கொள்ளலா மன்றோ.

சேக்கிழாரின் செந்தமிழ்ப் பாடல்களைச் செவ்வி தின் ஆராய்ந்த மீனாட்சி சுந்தர மேலவர் அப்பெருமானைத் "தெய்வச் சைவா" என்றும் "பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்றும் அவரது தீந்தமிழை, "தெய்வம் மணக்கும் செய்யுளெலாம்" என்றும் பல வாறாகப் புகழ்ந்துரைத் திருத்தல் ஒருகாலு மிகையாகாது. இவரது வரலாற்றை யாராயப் புகின், அதிலும் அவரது தெய்வீகவருள் தெள்ளிதின் புலனாகின்றது. முதன் மந்திரித் தொழிலை விடுத்துத் தில்லையில் தொண்டர்களின் சீரிய சரிதத்தினை எழுதிக் கொண்டிருந்தவமயம் அநபாய சோழனை அவரதரசன் அவரைக் கண்டபோது அவரது சிவவேடங் கண்டு கைகூப்பி வணங்கினன் என்றால் அவரது தெய்வப் புலமை தான் என்னே! தமிழன்பர்காள்! கூர்ந்து நோக்கிக் களியுங்கள். அவரவரது மனப் பான்மைக் கேற்றவாறேதான் அவரவரியற்றிய நூல்களுமமையும். எனவே, இப் பெருமானியற்றிய பெரிய புராணத்தை உள்ளூர ஆராயுங்கால் இவரது தூய மனமும் அடியார் பத்தியும், அடியாருள் ஒடுக்கமாய இறைபத்தி

யும் இடையீடின்றி இலங்கக் காணலாம். எனவே அடியார் பக்தியே இறையருளுக்குப் பாத்திரமாயிருக்கின்றது. இவ்வுண்மையை அறிந்தே தான் சேக்கிழார், அடியார் வரலாற்றினை அழகுற வரைந்தார்.

இப் பரந்த உலகிடைப் பிறந்த நாம் அறியத் தக்க பொருள்களை மூவகையாகப் பிரிக்கலாம். முதற்கண் உயிராகிய நம்மை நாமே முற்றும் உணர்தல்வேண்டும். நம்மை உணர்தலாவது யாது எனின் நம்முள் வேரூன்றிக் கிளைத்து நிற்கும் (நானெனும்) அகந்தைக் கிழங்கினை அகழ்ந்தெடுத்துத் தொழும்பருளக்கோயிற்கு விளக்கென வற்றுதல் ஆகும்.—பிறகு நம்மைச் சுற்றிலும் நம்மால் பார்க்கப் பெறும் பொருளாகிய உலகத்தைப் பற்றி யறிதல்வேண்டும்.—உலகை யறிதலாவது, கண்ட நம் பரு உடலைக் கொண்டு காணாத ஓர் நுண்ணுயிரை நிச்சயித்தல்போன்று கண்ட இப்பெரு உலகைக்கொண்டுகாணாத ஓர் மறைபொருளாம் இறைவனை நிச்சயித்தலாம்.—இறுதியாக எள்ளுக்குள் எண்ணெய்போல் இவ்வுலகில் எங்கணும் இடையறாது தோன்றும் இறையவனை யறிதல் வேண்டும். — இறைவனை யறிதலாவது, இயற்கையின் பாற்பட்ட இவ்வுலகிடை நிறைந்துள்ள இயற்கைப் பொருள்களைக் காண்டொறும் எல்லாவுடலு மிறைவனுடலே யென இயற்கையின் வனப்பைக் கண்டு வியந்தானந்தித்தலே யாகும்.— நாம் சொற்ப அறிவுடையோம். அவனன்றி ஓர் அணுவு மசையாது என்பதற் கிணங்க, எல்லாம் அறிந்த இறைவன் நிறைந்த அறிவுடையவன். எனவே அவ்வறிவால் அவனடையும் சுகம் அளப்பில. ஆகவே, மிகுந்த அறிவைப் பெற்று அதனுள் சுகத்தைப்பெற அனைவரும்வேண்டி நிற்கும் பான்மை உலகியல்பு. அங்ஙன் அம்முழுமதியை யடைய குறைமதியை நிறைமதியாக்குதல் வேண்டற்பாலது. அதன் பின்னர்தான் அச் சுகம் பெறக் காரணமும் ஏற்படும். தற்போது நாம் அனுபவிப்பன சுகமலவோ எனின் அஃதும் சுகந்தான். ஆனல் அவ்விரண்டிற்கும் மிகுந்த வேறுபாடுளது. தற்போதைய சுகம் அநித்தியம், அசுத்தம், சொற்பம். ஆனல் நாம் அடையவேண்டிய அச் சுகமோ நித்தியமே யன்றிப் பேரானந்தப் பெருவாரிதியில் திளைக்கவும் வல்லது. ஆகவே அச்சுகம் பெற, உற்ற வழியாயிருப்பது, நாம பெற்றுள்ள இம்மானிடப் பிறவியேயாகும்.

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்"

என்ற தமிழ் நாட்டன்பர் மணிவாசகப் பெருமானின் மறைவாக்கிற்கிணங்க, இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ என்பதை ஓர்ந்துவாலறிவன் நற்றாள் தொழுது இம்மானிடப் பிறவியை நன்கு பயன்படுத்தல் வேண்டும். ஆனல் அங்ஙன் ஒழுகுபவர் மிகச் சிலரே. ஏனெனின் நம்மிடமுள்ள குறைபாடே அதற்குக் காரணம். அதைத்தான் அஞ்ஞானம் என்றும் அறியாமையென்றும் மலம் என்றும் பலபடக் கூறுவர். அக் குறைபாட்டாற்றான் ஞானமெனும்பேரறிவுபெற இயலாதவர்களாகின்றோம். அம்மலம், ஆணவம், கன்மம், மாயையென மூவகையாகப் பகுத்தனர் புலவர். இம் மும்மலங்களை முற்றும் நீக்கியவரோ பிறவிப் பெருங் கடலைக் கடந்தவ

ராவர். அப்போதுதான் தேவராவர். அம் மலத்தை நீக்க அரும்பாடு பட்டுழைத்த நம்முன்னோர்கள் வழியொன்று கண்டு பிடித்துள்ளர். அதுதான் பத்தி யென்ற ஒன்றாகும். பத்தியின்றேல் (பூரண ஞானம்) பேரறிவில்லை; பேரானந்தமில்லை. அப்பத்தியெனும் பாசத்தினைக் கொண்டு பரம் பொருளைப் பிணிக்கலாம். "அன்பெனும் பிடியுளகப்படு மலையே" என்றார் கருத்தை நோக்கின், பத்தியின் வல்லமை தெள்ளிதின் விளங்கும்.

"கற்று மனம்போல் கசிந்து கசிந்தே யுருகி
முற்று ஆசான் இலிங்கம் உயர்வேடம்—பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்தித் தலையில் நின்றிடுவர் பார்"

என்றது உமாபதி சிவம். எனவே, இறைவனை மூன்று வகையில் வழிபட்டு முத்தி பெற்றார் நம் தண்டமிழ் நாட்டுப் பெரியோர்கள். அவர்களில் அறுபான் மூன்று அடியார்களும் சேர்வர். அவ்வடியவர்களுள் ஆசான்வழி இறையருள் பெற்றவர் ஒன்றுடன் பதின்மர், இலிங்கத்தின்வழி இறைவனது இணையிலா இன்பம் பெற்றவர் மூப்பதின்மர், அடியார்வழி அமலனது அருள் பெற்றவர் இருபான்மர் ஆவர். அடியவர்களின் தனிச் சிறப்புக் கருதி 'உயர் வேடம்' என்றார் உமாபதி சிவாசாரியார். எனவே அத்தகை அடியார்களது சரிதத்தினை அழகுபெறப் பாடிப் பரவிய பெருமை நம் தமிழ் நாட்டுப் புலவர் சேக்கிழாருக்குண்டு. அவ்வடியவர்களின் சரிதத்தினைப் "பெரிய புராணம்" என்ற ஓர் நூலாகக் கோத்து நமக்கு அருளியவர் அப்பெரியாரே யாவர். உலகில் பெரியவர்களெனமதிக்கத்தகும் அடியவர்கள் சரிதத்தினை யுரைக்கும் நூல் எனப் பொருள்படும்படி 'பெரிய புராணம்' என்று பெயரிட்டிருப்பதனாலேயே அந்நூலின் பெருமை நன்கு விளங்கும்.

ஆனால், தற்போது 'புராணம்' என்னும் சொல்லைக் கேட்டதும் கண்டதும் 'கடவுள் நூல்' என்று ஏழை மாந்தர் பலர் ஏமாந்து போகின்றனர்; பலர் "புராணமா; குப்பை" என்று பொதுவாக, அறிந்தோ அறியாமலோ புராண உலகையே கடிதில் கடிந்து விடுகின்றனர்; உண்மை நூலாராய்ச்சி யுடைய அறிஞருள் ஒரு சிலர் அவ்வாறு கொள்ளாது புராண உலகிடை விளங்கும் நன்மை தீமைகளைப் பகுத்தறிகின்றனர். எனவே அத்தகை மதிநுட்பத்துடன் ஆராய்வதே அழகுடைத்தாகும். புராணங்கள் நம் தமிழ் நாட்டின் முதல் நூல்களல்ல. புராணங்கள் ஆரிய உலகினின்றும் நம் நாட்டிற்குக் குடியேறினவை. புராண மெனும் சொல்லே தமிழ்ச் சொல் லன்று. புராணம் தமிழ் நாட்டில் புகுந்த பிறகுதான் தமிழர்களும் புராணம் எனும் சொல்லை ஆட்சியில் கொணர்ந்தார்கள். "பெரிய புராணம் என்பது தமிழ் நாட்டில் தோன்றிய ஒரு முதல் நூல்" என்பது தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் கூறிய மறுக்கொணு உண்மை. அப் புராணம் பதினெண் புராணக் கூட்டத்திலாதல், பிற

புராண இனத்திலாதல் சேர்ந்த தன்று. அத்தகைப் புராணங்கள் இரண்டொன்று போகத் தமிழிலுள்ள ஏனைய புராணங்கள் யாவும் வடமொழியினின்றுந் தமிழில் பெயர்த்துப் புலவர்களால் எழுதப் பெற்றனவேயாகும்.

எனவே அப் பெரிய புராணப் பாக்கள் யாவும் பத்திச் சுவையை நனியூட்டும் என்பதி லேதும் ஐயமில்லை. அப்பாடல்கள் யாவும் பல்லாயிரக் கணக்காக இறையருளைக் கடலெனப் பருகிக் கிடக்கின்றன. அக் கடலினின்றும் இரண்டொரு துளிகளை எடுத்துச் சொட்டுவாம்.

திருநாட்டுச் சிறப்பினைக் கூறப் போந்த சேக்கிழார் பெருமான்,

"காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை வயலெல்லா நெருங்குவளை
சோடெல்லா மடவன்னங் குளமெல்லாங் கடலன்ன
நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்".

என்று, சொல்வழகும், பொருட் செறிவும்பெற அமைத்தது போற்றத் தக்கதாகும்.

மற்றும்,

"சாலிநீள் வயலினோங்கித் தந்திகரின்றி மிக்கு
வாலிதாம் வெண்மை யுண்மைக் கருவினும் வளத்தவாகிச்
சூன்முதிர் பசலைகொண்டு சுருள்விரித் தரனுக் கன்ப
ராலின சிந்தைபோல வளர்ந்தன கதிர்களெல்லாம்".

"பத்தியின் பாலதாகிப் பரமனுக் காளா மன்பர்
தத்தமிற் கூடினார்க டலையினால் வணங்குமாபோன்
மொய்த்தநீள் பத்தியின்பான் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன சாலியெல்லாம்".

என்று பாடிய பெருமானார், கண்ணுதற் கடவுளின் அடியாரைக் காண்டொறும் எல்லாவுடலு மிறைவனுடலே என்று உளங்களிக்கும் தமது இயற்கைக் குணத்தை வயலில் வளர்ந்துள்ள நெற்பயிரின் மீதேற்றிக் கூறுகின்றார். அத்தகைய அருங்குணமுடைய அப்பெரியார், நெற்பயிர் கதிர் முற்றித் தலை சாய்ந்திருப்பதைக் கண்டு அவைகள், இறைவனது பத்தியில் இடையறா தீடுபட்டுள்ள அன்பர்கள் பலர் கூடி இறைவனது இணையடிகளைத் தம் அகத்தே பொருத்தித் தம் தலையால் வணங்குவது போன்றுளது என்று பாடியுள்ள பான்மை அவரது தெய்வப் புலமையை நன்கு வெளிப்படுத்தும்.

"தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமாரனுஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக்கலைபல திருந்த வோதி"

என்று சேக்கிழார் உணர்த்திய முறை உள்ளத்தைச் செம்மைப்படுத்துவதாகும். விற்புரை நுதலின் வேற்கண்ணியாம் பரவையாரின் பொங்குபேரழகையும் அங்கு நலங்களையும் கண்ட ஆளுடைய நம்பியார்,

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ வறியேனென் றதிசயித்தார்".

என்றும்,

அண்டர்பிரான் திருவருளால், அயலறியா துமனம் நாடப்
பண்டை விதியால் இருவரும் ஒன்றுகூட்டக் கண்ணோட்டங்
கொண்ட பரவையார், அந்தம் பொங்கும் சுந்தர ஏந்தலை,

"முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ பெருகொளியாற்
றன்னேரின் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
வென்னேயென் மனந்திரித்த விவன்யாரோ வெனநினைந்தார்".

என்றும், பாடிய சேக்கிழார் தெய்வத்தினருளைத் தான் யாண்டும் அறிகின்றார். இறைவனை இலிங்க வடிவத்தே கண்டு பேரின்ப வெள்ளத்தில் திளைத்த காளத்தியப்பரின் அளவு கடந்த அன்பைக் குறிக்குமிடத்து சேக்கிழார்,

"இவர்தமைக் கண்டேனுக்குத் தனியரா யிருந்தாரென்னே
யிவர்தமக் கமுது செய்யவிறைச்சியு மிடுவாரில்லை
யிவர்தமைப் பிரிய வொண்ணாதென்செய்கே னினியான்சால
விவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டுமென்று,

போதுவர் மீண்டுசெல்வர் புல்லுவர் மீளப்போவர்
காதலினோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்
நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவேனென்பார்".

என்று, "வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பென்ன" நீங்காதணைத்துக் கொண்ட கண்ணப்பரின் வாயிலாக, தான் இறைமாட்டுக் கொண்டுள்ள பத்தியை வெளிப்படுத்துகின்றார்.

எனவே, இத்தகைய தெய்வீகப் பாட்டுகள் இவர் இயற்றிய நூலில் மலிந்து கிடக்கின்றன. தமிழன்பர்கள் அத்தகை பாக்களைக் கற்றுத் தமிழன்னைக் குரிய சேய்களாவார்களாக.

தமிழ்த்தாய் வாழ்க!

யதுகுல நாசம்.

சிறந்த பல ஸம்ஸ்கிருத பண்டிதர்களால் மொழிபெயர்க்கப்பட்டதும் சென்னை: டாட்டா அச்சுக்கூடம், 1926-ம் வருஷப்பதிப்புமான ஆஸ்வமேதிக முதலிய பர்வங்களில் மௌஸல பர்வம், 2, 3, 4-வது அத்யாயங்களின் திரட்டு.

(சிவபரத்துவ நிரூபண சிகாமணி
பொன்னேரி திரு, தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்)

ஸாரணனை முதன்மையாகக் கொண்ட வீரர்கள், விஸ்வாமித்திரரும் கண்வரும் நாரதரும் துவாரகைக்கு வந்திருப்பதைகண்டு ஸாம்பனை ஸ்திரீயைப் போல் அலங்கரித்து முன்னிட்டுக்கொண்டு அம்முனிவர்களிடம் சென்று, 'ரிஷிகளே! இவள் பப்ருவினுடைய மனைவி. இவள் எதைப்பெறுவாள்? நன்குபாருங்கள்' என்று சொன்னார்கள். துராத்மாக்களான அவர்களால் அவமதிக்கப்பட்ட முனிவர்கள் கோபத்தால் கண்கள் சிவந்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு (அவர்களைநோக்கி), 'வாஸுதேவருடையபுத்திரனுனஇந்த ஸாம்பன்விருஷ்ணிகளும்அந்தகர்களும் அழிவதின்பொருட்டுக்கோரமான இருப்புலக்கையைப் பிறப்பிப்பான்; ஜரன் என்னும் செம்படவன், பூமியில் சயனம்செய்துகொண்டிருக்கும் கிருஷ்ணரைப் பிளக்கப்போகிறான்' என்று சொன்னார்கள். ஸாம்பன் விருஷ்ணி குலத்திலும் அந்தக குலத்திலுமுள்ள ஆண் மக்களைப் பஸ்மமாகச் செய்வதும் விருஷ்ணிகளையும் அந்தகர்களையும் கொல்வதற்காக (வந்த) யமதூதன் போன்றதும் பெரிதும் சாபத்தால் உண்டானதும் கோரமுமான உலக்கையைப் பெற்றான் அரசன் மிக்க மனவருத்தமுற்று அதைச் சிறிய பொடியாகச் செய்வித்தான். வேலைக்காரர்கள் அந்தப்பொடியை ஸமுத்திரத்திலும் போட்டுவிட்டார்கள். காலமானது (கோட்டான் முதலான வடிவத்துடன்) எல்லாருடைய வீடுகளிலும் தினந்தோறும் ஸஞ்சரித்தது. ஜனர்த்தனர் அந்தக் காலத்தைப் பற்றி ஆராய்ந்து முப்பத்தாறுவதுவருஷம் வந்துவிட்டதாக எண்ணினார். அப்பொழுது, வேலைக்காரர்கள், கிருஷ்ணருடைய உத்தரவின் மேல், 'புருஷஸ்ரேஷ்டர்களே! ஸமுத்திரத்தைக் குறித்துத் தீர்த்தயாத்திரை செய்யவேண்டும் என்று பறையறையச் செய்தார்கள்......பிறகு, அந்தகர்களும் போஜர்களும் சைனேயர்களும் விருஷ்ணிகளும் காலத்தால் தூண்டப்பட்டுப் போரில் உலக்கைகளால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். அவர்களுள் எவனுக இருந்தாலும் கோபங்கொண்டு ஏரகத்தை ‡ எடுத்தால் அதுஅப்பொழுது வஜ்ரமானதுபோலக்காணப்பட்டது. அவையெல்லாம் பிராம்மண சாபத்தால் செய்யப்பட்டன. வாஸுதேவர் அப்பொழுது (அவ்வந்தகர் முதலியவர்களை) மிச்சமின்றிச்செய்தார்.

---

‡ சமுத்திரத்திலெறியப்பட்ட உலக்கைத் தூள்களே கோரைகளாக முளைத்திருந்தன. அந்தக்கோரைகளே வஜ்ராங்களாகக் காணப்பட்டன.

இம்மை வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

(கண்டாச்சிபுரம் திரு, அ. முத்தைய பிள்ளை அவர்கள்.)

வானவர் விழையும் மேனிலை பொருந்திய நானிலத்தின்கண் மானுட வுருவின் வந்தவராகிய மாந்தர்க்கு இந்திரன் முதலிய விறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய உறுதியென உயர்ந்தோரா லெடுக்கப்பட்ட பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காம். அவற்றுள் இம்மையிற் பெறப்படுவது முதன் மூன்றுமேயாம். கடையொன்றும் மறுமைப்பயனும். அவற்றுள், அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்து விலக்கியன வொழித்தலாம். பொருளாவது, இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பது. இன்பமாவது ஒருகாலத் தொருபொருளான் ஐம்புல நுகர்தற் சிறப்புடைத்தாய காமம், வீடாவது மனவாக்குக்கெட்டா நிலைமைத்தாய் துறவறநிலையாற்பெறப்படுவது. இதனை,

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

எனச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் நந்தமிழன்னையாரால் கூறப்பட்டுளது. இம்மைப்பயன் மூன்றனுள் முதற்கண்ணுளதாகிய அறம் இரண்டாவதாகிய பொருட்டுணை கொண்டே நடைபெறுவதாகும். இவ்விரண்டும் ஒருங்கமையப் பெற்றார்க்கே மூன்றாவதாகிய இன்பம் விளையும். அறத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாயுள்ளது பொருளென்பதை விளக்க முப்பானூலாகிய நம் முதற் பாவலர், அரிமா நோக்கென அறத்திற்குமின்பத்திற்கு மிடைவைத் தோதினர்.

"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு".

ஒள்ளிய பொருளை மிகுதியாக உண்டாக்கினவர்க்கு அறமும் இன்பமு மாகிய மற்றையிரண்டும் ஒருங்கே எளிய பொருளாம். எனக் கூறியுள்ளனர்.

செல்வமுள்ளவனுக்கே கல்வியும், அறிவும், குணமும், சொல் மதிப்பும், ஜனவசியமும் உண்டாகும். தாழ்ந்த குலத்திற் பிறந்தானாயினும் செல்வமுடையவனாயின் உயர்குடி மக்களும் அவனை மேன்மைப் படுத்துவர்.

"பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம்
பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லாதவர் பிணமாம்
பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்கும் தண்டலைநீ ணெறியாரே
பார்மீதிற் றான்
பணந்தானே பந்தியிலே குலந்தானே குப்பையிலே
படுக்குந் தானே"

"பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
புண்ய வசமிக்கவுண்டு
பூதலத்தவ ரெலாங் கண்டவுட னேதொழுது
பூபதி குபேர னென்பார்
திருகொன்றி லாதமதி யுண்டுதிர னுண்டுமெய்த்
தேசிகர்த மருளுமுண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் பெருமையுந்
தீரமொடு வீர முண்டாங்
கருளுண்டு பந்துஜன வுறவுண்டு மண்பினர்க
ளாளோர்க ளுண்டு நிதமும்
அவர்முகங் கன்னிலமு தண்டுகளை யுண்டுநல்
லானந்த பூர்த்தி யுண்டு"

என்னுஞ் சதகநூற் பாக்கள் செல்வத்தின் சிறப்பும் பயனும் செவ்வனே வகுத்துக் கூறுகின்றன.

பொருளின்றேல் அறமும் இன்பமும் புகழும் இன்றாம். பொருளில்லாதவன் எக்காரியத்தைச் செய்ய முயற்சிப்பினும் முடிவுறா. அறமும் அவன்பால் நிலைத்திரா. தான் கொண்டகாரியம் பூட்டுப்பாடுற்று அறநிலை தவறிப்போயின் மனச்சஞ்சலமேற்பட்டு, இன்பம் இருந்த இடம் தெரியாமல் மறையும். பொருளில்லாதானை மனைவிதழுவாள்; தாய்நிந்திப்பாள். அவனுடன் தகப்பன் சந்தோஷியான்; உடன்பிறந்தார்கள் பேசமாட்டார்கள்; வேலைக்காரன் கோபித்துக்கொள்ளுவான்; சிநேகிதர்கள் நல்லசொற் சொல்லமாட்டார்கள். பணமுள்ளவனை எல்லோரும் விரும்பி அவனுக்கு ஸ்வாதீனமாவார்கள். பணமில்லாதவனிடம் எவரும் செல்ல அஞ்சுவர். உலகத்தில் அவனுக்கு இன்பமே கிடையாது. இதனால் அவன்

இருந்தும் இறந்தவன் போலாகிருன். "பணமில்லாதவன் பிணம், பண்டமில்லாதவன் முண்டம்" என்பதும் இது குறித்தே. தன் ஸ்வாதீனமாக ஒன்றையுஞ் செய்யக் கூடாமையால் பொருளில்லானை நடைப் பிணம் என்றல் மிகையாகா.

"பொருளில் லார்க்கின்பமில்லை புண்ணியமில்லை யென்றும்
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே"

"கல்லானே யாகுலுங் கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்"

என்றார் ஆன்றோர் வாக்குகளையும் நோக்குக.

கல்வி உலகத்தில் அழிவற்ற சீரிய செல்வமே யாயினும் அத்தகைய கல்வியைக் கற்கப் பொருள் இன்றியமையாததென்பதை எண்ணுக. "பொருளில்லான் வேளாண்மை காமுறுதல் இன்னு" என்றபடி வேளாண்மைக்கும் பொருளில்லாவிடின் துன்பம் பயக்கும்.

இனி, வீட்டுலகத்தின்பமும் இப்பொருட் செல்வத்தாலேயே பெறப்படும். "அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு" பொருளில்லாமல் இவ்வுலகத் தின்பமில்லாததுபோல அருளில்லாதவர்க்கு வீட்டுலகத் தின்பமில்லை எனக் கூறிய பொய்யாமொழியார்,

"அருளென்னு மன்பீன்குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு"

அன்பினு லீனப்பட்ட அருளென்னுங் குழவி பொருளென்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தையுடைய செவிலியான் வளரும் எனப் பின்னும் கூறியுள்ளார். தொடர்பு பற்ருத வறுத்த முற்றுர்மேற் செல்வதாகிய அருள் தொடர்புபற்றி அன்பு முதிர்ந்த விடத்துளதாகலின், அருளை அன்பீன் குழவி யென்றும், ஆதுவறியார் மேற்சொல்வது அவ்வறுமை களையவல்லார்க் காதலின் பொருட்செல்வத்தைச்செல்வச்செவிலி யென்றுங்கூறப்பட்டுள்ளது. இதனல் பொருளைக் கொண்டே அன்பும் அருளும் உடையராதல் வேண்டுமென்பது வெள்ளிடை.

ஒருவன், தம்பகைவர் தருக்கினையழிக்கும் படைக்கலம்பெற்று இம்மையில் இனிது வாழவேண்டுமானால், அறம் பொருளின்ப மொருங்கே யடையவேண்டுமானால், மறுமை வீடடையும் மார்க்க மாகிய அருளைப் பெறவேண்டுமானால் "திரைகடலோடியும் திரவியந் தேடு"தல் வேண்டும். அத்திரவியம் ஒன்றே இம்மை வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அப்பொருளை நன்மார்க்கத்தி லீட்டுதல் வேண்டும். நன்றேதரினும் நடுவிகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விட்டு, நன்னெறியிலே வளைகடல் திரிந்துபொருள்தேடவேண்டும்; தேடி வளரறம் செய்யவேண்டும்.

ஆதலால் நாம் அறனும் இன்பமும் ஈனும்பொருளைத் தீதின்றி திறனறிந்து தேடி இம்மை வாழ்விற் சுகமே வாழ்ந்து மறுமையில் முத்தி வீடடைய முயற்சிப்போமாக.

திருமக ளலத்தாற் றேசஞ் செழிக்குக!

சிவநேசனுக்கு வாழ்த்து.

(சுதுமலை, சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.)

சீரார் சிவசமயத் தெய்வ நெறிகமழும்
பேரார் சிவநேசன் பெட்பினுடன்—பார்மீதில்
நன்று விளங்கி நடந்துவள ரக்கிருபை
என்றுஞ்செய் கந்தா விசைந்து.

(கும்பகோணம் தமிழ்ப்பண்டிதர்,
திருவாளர், ஊ. சா. வேங்கடராமையரவர்கள்.)

சைவமெய்ச் சிறப்புந் தெய்வத்
தமிழ்மொழிச் சுவையும் யார்க்கும்
கைவரக் கருதிச் சான்றோர்
கவினுறப் பொறித்துத் தந்த
பொய்விர வாத தேர்ச்சிப்
பொருளுரை தாங்கித் தொண்டு
செய்வதா லுயர்திங் கட்டாட்
சிவநேசன் சிறந்து வாழி